# 3.7 மீக்காவின் குரல்



இறைவாக்கினருள் ஒருவரான மீக்கா எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் எசாயா, ஓசேயா காலத்தில் யூதாவில் இறைவாக்குரைத்தார். இவரின் இறைவாக்கு இருபத்தோராம் நூற்றாண்டில் வாழும் நமக்கு முக்கிய செய்தியாக விளங்குகிறது.

## மீக்காவின் அழைப்பும், செய்தியும்

சமூகத்தில் **நீதியுடன் கூடிய சமாதானத்தைக் கட்டியெழுப்புவதே** இவரின் பணியாகும். ஆமோஸ் வட அரசில் இறைவாக்குரைக்கும் போது மீக்கா தென் அரசில் இறைவாக்குரைத்தார்.

சமாதானம் - மீக்கா 4:1 - 4
சமாதானத்தின் குமாரன் - மீக்கா 5:2 - 4
நேர்மையுடன் கூடிய சமாதானம் - மீக்கா 6:8

## மீக்கா

மீக்கா இறைவாக்கினர் யூதாவில் உள்ள நாட்டுப்புற மோரசேத் என்னும் நகரில் பிறந்தார். இறைக்காட்சியின் மூலம் இறைவாக்குரைப்பதற்கு அழைக்கப்பட்டார். மீக்கா என்பதன் கருத்து 'யாவேயைப் போன்று வேறு எவரும் உளரோ?' என்பதாகும்.



இலவச விநியோகத்திற்காக

**மீக்காவின் செய்தியை பின்வருமாறு விளக்கலாம்.**




**செயன்முறை**

1. உயர்வு தாழ்வு பாராது இறை செய்தியை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்களை மீக்கா 6:11-12 வாசித்து எழுதுங்கள்.

   1 ..................................................................................................

   2 ..................................................................................................

2. ஒவ்வொருவரின் தவறுகளுக்கும் கிடைக்கும் தண்டனைகள் சிலவற்றை எழுதுங்கள் (6:14-16)

   1 ..................................................................................................

   2 ..................................................................................................

   3 ..................................................................................................

   4 ..................................................................................................

   5 ..................................................................................................



இலவச விநியோகத்திற்காக

**யுத்தமில்லாத சமாதானம் என எவற்றைக் கூறலாம். மீக்கா 4:1-4 ல் கூறப்பட்டுள்ளதை வாசித்து அறியலாம்.**

**யுத்தமில்லாத சமாதானம்**

*பல மக்களினங்களுக்கு நீதி வழங்குவார். வலிமைமிக்க வேற்றினத்தாருக்கு நீதி வழங்குவார்.*

*அவர்களோ தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக் களாகவும், ஈட்டிகளை கருக்கரிவாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள்.*

*ஓர் இனத்திற்கு எதிராக மற்றதோர் இனம் வாள் எடுக்காது.*

**மீக்கா 4:3**

போரினால் அல்லற்படும் நமது நாட்டுக்கு இச் செய்தி மகிழ்ச்சி அளிப்பதாகும். இது முழு சமுதாயத்திற்கும் சொல்லப்படும் சமாதானச்செய்தியாகும்.

*"ஒவ்வொருவரும் திராட்சைத் தோட்டத்தின் நடுவிலும், அத்திமரத்தின் அடியிலும் அமர்ந்திருப்பர். அவர்களை அச்சுறுத்துவார் எவருமில்லை."*

**முழுமையான சமாதானம்**

*குன்றுகளுக்கெல்லாம் மேலாக உயர்த்தப்படும் மக்களினங்கள் அதை நோக்கி சாரை, சாரையாக வருவார்கள்.*

*"புறப்படுங்கள் ஆண்டவரின் மலைக்குச் செல்வோம். யாக்கோபின் கடவுளது. கோவிலுக்குப் போவோம்."*

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு அழகான சமாதான யுகத்தை ஏற்படுத்துவதற் கென இறைவனின் அருள் கிடைப்பதற்கு வேண்டுதல் செய்வதாக மீக்கா அறிவிக்கிறார். முக்கியமாக மக்களிடம் நீதியை நிலைநாட்டக் கூடிய செயல்பாட்டை எதிர்பார்க்கின்றார்.

இறைவனிடம் உள்ளார்ந்த அன்பு செலுத்துவதன் மூலம் நாம் இறையன்பைப் பெற்று அவருடன் வாழ முன்வருதல் வேண்டும்.

## இன்றையக் காலகட்டத்தில் இறைவனின் எதிர்பார்ப்பு

சமாதானத்தை ஏற்படுத்தும் சமாதான குமாரனைப் பற்றி மீக்கா இவ்வாறு கூறுகிறார்.



அவர் வரும் போது, ஆண்டவரின் வலிமையோடும் தம் கடவுளாகிய ஆண்டவரது பெயரின் மாட்சியோடும் விளங்கித் தம் மந்தையை மேய்ப்பார்; அவர்களும் அச்சமின்றி வாழ்வார்கள்; ஏனெனில் உலகின் இறுதி எல்லைகள்வரை அப்போது அவர் மேன்மை பொருந்தியவராய் விளங்குவார்; அவரே அமைதியை அருள்வார். (மீக்கா 5:4)

இவ்வாறான சமாதானம் இயேசு கிறிஸ்துவின் வருகையின் பின்பே முழுமை அடைந்தது. இயேசு கிறிஸ்து உடல், உளரீதியாக மக்களுக்கு விடுதலை கொடுத்தார். அவரே பாவங்களிலிருந்து மன்னித்து மீட்பை வழங்கினார்.

### சிந்தனைக்கு

* இவ்வாறு மீக்காவின் செய்தியின்படி நாம் உலகிற்குத் தேவைப்படும் சமாதானத்திற்காக எவ்வாறு செயல்பட முடியும்?

* கிறிஸ்தவ அடியவர் என்னும் வகையில் சமாதானத்தைக் கட்டியெழுப்ப நாம் செயல்பட வேண்டிய முறை தொடர்பாக கீழ்காணும் செயல்பாட்டில் உங்கள் கருத்தை எழுதுக.



இலவச விநியோகத்திற்காக

## செயல்பாடு

1 மீக்காவின் கருத்துக்களின்படி தற்போதைய சூழ்நிலையில், "சமாதானத்திற்கான வழிகள்" என்ற தலைப்பின் கீழ் பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதுக.

2 சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு மாணவர்களாகிய நீங்கள் செய்யக்கூடிய செயற்பாடுகளின் மூலம் கீழ்வரும் அட்டவணையை நிரப்புக.

| | உள ரீதியான சமாதானம் | உடல் ரீதியான சமாதானம் |
|---|---|---|
| பாடசாலையில் | | |
| வீட்டில் | | |



இலவச விநியோகத்திற்காக